Registered as a Newspaper

'சிக்மா பம்ப்ஸ்'
மின்சாரத்தில் இயங்கும் மோட்டர்கள் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-25

Cegma Pumps
பண்ணைகளில் இயங்கும் இங்கிலிஷ் வில்லியர்ஸ் என்ஜின் பொருத்திய பம்புகளுக்கு
யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம் சந்தி, யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸ்ரீ ஆடி மீ 6 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 25 (22 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 203

## தமிழர் குழுக்களுடன் மேனன் பேச்சு!

சென்னை, ஜூலை 22
இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. கே. பி. எஸ் மேனன் நேற்று சென்னையில் உள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளைத் தனித் தனியே சந்தித்துப் பேசினூர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

அதன் பின்னர் அதிகாரி ஒருவர் சொன்னதாவது;

அண்மையில் இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகளில் ஆக்கபூர்வமான அம்சங்கள் வெளிப்படும் என்று நம்புகின்றோம்.

இக்கட்டான இத்தருணத்தில் மேலும் எதுவும் ஊகிக்கலாகாது.

இலங்கையில் நிலைமை வழமைக்குத் திரும்ப வேண்டும்.

பாரம்பரிய உறவை இரு நாடுகளுக்கும் இடையே நிலைநாட்டுவதே இந்தியாவின் குறிக்கோளாக இருக்கும்.

—இப்படி அந்த அதிகாரி சொன்னூர்.

வெளியுறவுச் செயலாளரைச் சந்தித்த தமிழர் அமைப்புக்கள் பிரதிநிதிகள் பற்றிய விவரங்கள் வருமாறு;

1. தமிழர் விடுதலைக் கூட்டணி; இரா சம்பந்தன். அ. அமிர்தலிங்கம்.
2. தமிழீழ விடுதலைப் புலிகள்: அன்ரன் பாலசிங்கம்.
3. ஈரோஸ்: சங்கர்.
4. ஈ. பி. ஆர். எல். எவ்.: எல்.சேதீஸ்வரன்.
5. போராளிகள் கூட்டமைப்பின் பிரதிநிதி: டக்ளஸ் தேவானந்தா. (உ-எ)

## மேனன், டிக்ஸிற், பூரி குழுவினர் எச். ஜி. ஆருடன் நேற்று பேச்சு

### கொழும்பு நிலைமை குறித்து நேரில் விளக்கம்

சென்னை, ஜூலை 22
இந்திய வெளியுறவுச் செயலாளர். திரு. கே. பி. எஸ். மேனன் தலைமையில் அதிகாரிகள் குழு நேற்று சென்னையில் முதலமைச்சர் எம்: ஜி இராமச்சந்திரனுடன் பேச்சுக்களை நடத்தியது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் முதலாவது செயலாளர் ஹாடிப்பூரி ஆகியோர் வெளியுறவுச் செயலாளருடன் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

தமிழ் நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் முதலமைச்சருக்கு உதவினூர்.

பேச்சுக்கள் ஒன்றரை மணித்தியாலங்கள்வரை நீடித்தன.

பின்னர் திரு. மேனன் செய்தியாளர் மத்தியில்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி.எஸ். மேனனிடம் ஈரோஸ்கூறியதென்ன?

சென்னை, ஜூலை 21
வடக்கு – கிழக்கு இணைப்பு சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறூர்.

இது 1985 ஆகஸ்ட்30ல் ஜே.ஆர்.திம்புவில் கொடுத்த வாக்குறுதிக்கு முரண்பாடானதாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவும் நாடாளுமன்றத்தில் சட்டமாகக் கொண்டுவந்து நிறைவேற்றப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு என்று இப்போது கூறுவது புதிய யோசனைகள் மனப்பூர்வமான விருப்பத்தோடு முன்வைக்கப்படவில்லை என்பதையே காட்டுகிறது.

இவ்வாறு இன்று வெளியுறவுச்செயலாளர் திரு. கே. பி. எஸ். மேனனிடம் ஈரோஸ் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

திரு. வி. பாலகுமார், திரு. சங்கர் ஆகியோர் திரு. மேனனுடன் பேசினர்.

வடக்கு கிழக்கு இணைப்பு 1931ஆம் ஆண்டில் டொனமூரினுல் முன்வைக்கப்பட்ட திட்டம். இதனை இதுவரை எதிர்த்துவந்த ஜே. ஆர். இப்போது சம்மதிப்பது என்பது இந்தியாவின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயாகும்.

இது மனப்பூர்வமான தீர்வு அல்ல, இந்தியாவை இழுத்தடிப்பதற்கான சூழ்ச்சியாகும் என்றும் அவர்கள் திரு. மேனனிடம் விளக்கினர். (அ-10)

# இடைக்காலத் தீர்வு எதையும் ஈரோஸ் இயக்கம் ஏற்கமாட்டாது

## புதிய யோசனை இந்தியாவை இழுத்தடிக்கும் அரசின் தந்திரம்

### நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நேசன் பேட்டி

அலுவலகச் செய்தியாளர்:- கே. இரத்தினராஜசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

தமிழர் பிரச்சினைக்கு ஸ்ரீ லங்கா அரசு முன்வைக்கும் இடைக்காலத் திர்வு எதையும் ஏற்கும் எண்ணம் எமது இயக்கத்துக்கு இல்லை.

ஸ்ரீ லங்கா அரசு, பிரச்சினையைத் திர்க்க மனப்பூர்வமாக விரும்பினுல், அது இறுதியும் முடிவுமாக ஒரு திர்வை முன் வைக்க வேண்டும்.

இப்போது முன்வைக்கப்பட்ட புதிய யோசனை தமிழர் பிரச்சினைக்கு இறுதித் திர்வாக இருக்க முடியாது. இந்தியா மீது தாக்குதல் நடத்துவதற்காக நட்பு நாடு ஒன்றின் உதவியைப் பெறும் பொருட்டு, காலத்தை வாங்குவதற்காகவே, வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஸ்ரீ லங்கா அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

இவ்வாறு ஈரோஸ் இயக்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திரு. நேசன் நேற்று மாலை உதயனுக்கு அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் பேசும் மக்கள் சார்பில் எந்த விடுதலை இயக்கம் அங்கீகரிக்கப்பட்டாலும், அது எமக்கு மகிழ்ச்சி தருவதாகும். யார் அங்கீகரிக்கப்பட்டாலும், விடுதலைப் போராட்டம் அங்கீகரிக்கப்பட்டதற்குச் சமமாகும்.

ஈரோஸ் இயக்கத்தையும் இந்தியா இன்னும் சில தினங்களில் அங்கீகரிக்கும் என்று நம்புகிறோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் இணைந்த ஓர் அமைப்பு உருவாகவேண்டும் என்பதே ஈரோஸின் இலட்சியம். அதற்காகவே நாம் போராடுகிறோம். மலையகத் தமிழர்களுக்கு விடிவில்லாமல் ஏனையதமிழர்களுக்கு விடிவில்லை. அவர்களது பிரச்சினைகளை அப்படியே விட்டுவிட்டு ஏனைய தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அவர்களும் ஈழத் தமிழர்களின் ஓர் அங்கம்.

முந்திய தடவை ஸ்ரீ லங்கா அரசு இயக்கங்களை அழிப்பதற்காகப் போர்நிறுத்தங்களை அமுல் செய்து காலத்தை வாங்கியது.

இம் முறை இந்தியா மீது தாக்குதல் நடத்துவதற்காக — ஒரு நட்பு நாட்டைக் கண்டுபிடிக்கும் வரை — காலத்தை வாங்குவதற்காகவே, தானே எதிர்த்து வந்த வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஜனாதிபதி ஜே. ஆர். இணங்கி இருக்கிறார்.

இப்போதைய பேச்சுக்கள் முக்கட்டங்களாக நடக்கின்றன. [1] ஸ்ரீ லங்கா — இந்தியா [2] இந்தியா — தமிழர் விடுதலை இயக்கங்கள் [3] இந்தியா—மிதவாத தமி
(4ஆம் பக்கம் பார்க்க)

### சிறையிருக்கும் சிப்பாய்களைச் சந்திக்க

## வவுனியா தேரர் யாழ் வருவார் போராளிகளுடனும் பேச்சு!

வவுனியா, ஜூலை 22
விடுதலைப் புலிகளின் கைதிகளாக, கடந்த நான்கு மாதங்களாக அவர்களது தடுப்புக்காவலில் உள்ள 12 படையினரையும் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்களுடன் வவுனியா விகாராதிபதி வண. சியம்பலகஸ்வேவ விமலசார தேரர் யாழ் வரவுள்ளார்.

இன்னும் சில தினங்களில் இங்கு வரும் அவர் இங்குள்ள போராளிகளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

கடந்தவாரத்தில் சமாதான தூது ஒன்றை மேற்கொண்டு அவர் தமிழகம் புறப்படவிருந்த போதிலும் அவ் விஜயம் சற்று பின்போடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியத் தூதரக அதிகாரிகள் அவரது தமிழக விஜயத்தை ஓர் அரசியல தூதாக அங்கீகரிக்க மறுத்ததும் தெரிந்ததே. இருந்தபோதிலும் இந்திய அரசின் அனுமதியுடன் அவரை சமாதான மதத் தூதுவராக அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இந்திய அரசின் முன் அனுமதியோடு கூடிய விரைவில் தமிழகம் செல்வேன் என அவர் உறுதியாகத் தெரிவித்தார். (உ-164)

## முஸ்லிம் மக்களின் 4 கோரிக்கைகளை கூட்டணி ஏற்றது

தனி மாநில அமைப்பில் முஸ்லிம் மக்கள் முன்வைத்துள்ள நான்கு அரசக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம் எடுத்துள்ளது.

கூட்டணியின் அரசியல் குழு கூடி இம் முடிவை எடுத்ததாக கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

— இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

முஸ்லிம் மக்களின் நான்கு கோரிக்கைகளும் வருமாறு;

★ காணிக் குடியேற்றம், தொழில், கல்வி ஆகிய துறைகளில் விகிதாசார அடிப்படையில் வாய்ப்பு.

★ முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் விவசாயம், தொழில்நுட்ப, பொருளாதாரத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ முஸ்லிம்களின் மதம், கலை, கலாசாரம் தனித்துவம் பேணப்பட வேண்டும்.

★ விகிதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். (உ-எ)

## குடாநாட்டில் வயிற்றோட்ட நோய்! மூன்று பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ் குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வயிற்றோட்ட நோய் காரணமாக மூன்றுபேர் மரணமடைந்துள்ளனர்.

நூற்றுக்கும் அதிகமானோர் இந்த நோயினுல் பிடிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மரணமானோரில் இரண்டு வயதுக் குழந்தையும் அடங்கியுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியில் இக் குழந்தை மரணமானது.

மற்றைய இருவரும் சாவகச்சேரியிலும், மந்திகையிலும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த நோய் தொடராமல் இருப்பதற்கு பொதுமக்கள் முடிந்தவரை சுகாதாரத்தைப் பேணுமாறும்–

வைத்தியசாலையை
(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஓ, உப்பிடித்தான்! ஒருக்கா பேச்சுவார்த்தைக் காலம், ஒருக்கா சண்டைக் காலம் எண்டு நீளுதே ஒழிய தீர்வு வாறதாக காணயில்லையே!

## புதிய யோசனைக்கு சிறிமாவோ எதிர்ப்பு

கொழும்பு. ஜூலை 22
இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள புதிய யோசனைகளுக்கு சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றூர்.

டிசம்பர் 19 யோசனைகளையே எதிர்த்தோம். அதைவிடக் கூடியதை ஆதரிக்கவா போகின்றோம்?

— இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டிருக்கின்றூர். (இ-எ-164)

## ஈழநாடு ஸ்தாபகர் கே. சி. தங்கராசா காலமானூர்

யாழ்ப்பாணம், ஜூலை 22
'ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகரும், தலைவருமான திரு. கே. சி. தங்கராசா கடந்த திங்கள் கொழும்பில் காலமானூர் அவருக்கு வயது 80.

கொழும்பில் இயங்கிய 'டைம்ஸ் ஓவ் சிலோன்' நிறுவனத்தின் இயக்குநர்களின் ஒருவராகப் பணிபுரிந்த அவர், யாழ்ப்பாணத்தில் மாகாணத் தினசரித் தமிழ்ப் பத்திரிகையை 28 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த முன்னோடி.

கொழும்புப் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் கொடி கட்டிப் பறந்த காலை, பெரும் நட்டத்தின் மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழை மனம் தளராது தொடர்ந்து நடத்தி கட்டி வளர்த்த பெருமை திரு. தங்கராசாவைச் சாரும்

'சற்றடே றிவியு' பத்திரிகை 1984 ஆம் ஆண்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## மகிழவெட்டுவானில் 6 தமிழ் இளைஞர் பலி

கொழும்பு. ஜூலை 22
மட்டக்களப்பு மகிழவெட்டுவான் பகுதியில் திங்கட்கிழமையன்று 6தமிழ் இளைஞர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேவேளை கிரானிலும் நான்கு தமிழ் இளைஞர்கள் திங்களன்று படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ)

## விளக்கம் தேவை என்கிறூர் அமிர்

சென்னை, ஜூலை 22
இலங்கையின் புதிய யோசனைகள் குறித்து விளக்கம் தேவை. அதுவரை கருத்து வெளியிட முடியாது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார் என்று ஏ.எவ். பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது. (இ-எ)

### சுபநேரம்

22 07-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4 31 முதல் 6. 01 வரை
ராகுகாலம்:-
12 01 முதல் 1.31வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**விற்பனைக்கு**

சகலவிதமான பிறந்த தின, திருமண மற்றும் வைபவங்களுக்குமான வாழ்த்து மடல்கள் புதிதாக வந்து உள்ளன. வியாபாரிகளுக்கு சழிவு வழங்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளும் வியாபாரிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படும். பூபால சிங்கம் புத்தகசாலை 15/2 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3224)

**பிறந்தநாள் வாழ்த்து**

சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வி கேசவதாசன் கோபிகா இன்று 22-07-1987 இல் முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார். பல்லாண்டு வாழப் பெற்றோர், உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள். (1293)

# போராளிகளால் தான் இன்று

# சிங்களக் குடியேற்றங்கள் தடைப்பட்டிருக்கின்றன

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் கூறுகிறார்

அம்பாறை, ஜூலை 22

தமிழ்ப் போராளிகள் ஆயுதம் ஏந்திப் போராடிக்கொண்டிருப்பதால் அரசின் திட்டமிட்டகுடியேற்றங்கள் தடைப்பட்டுள்ளன. அன்றேல் இது வரை கல்முனையிலும், நிந்தவூரிலும் அரச மரங்களைநட்டு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருப்பர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர் ஜனாப் அமீருல்அன்ஸார் மௌலானா மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் 5ஆம் குறிச்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அல்-ஹாஜ் எம். எப். ஏ மஜீத் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஜனாப் அமீருல் அன்ஸார் மௌலானா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

பெரிய சக்தி மிக்க நாடான இந்தியா தமிழ் மக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டும் கூட பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு இந்த அரசு தயாரில்லை என்பதை வெளிக்காட்டிவருகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனைத் தேடி அரசு 'கிலி' கொண்டு அலைகிறது. யாழ் மக்களுக்கு உணவுக் கப்பல்களை இந்தியா அனுப்பும் விடயத்தில் சிங்கள இனத்தின் 'ஹீரோ'வாக பிரதமர் திரு. பிரேமதாச மாறி விராப்புப் பேசி மண் சவ்வியுள்ளார்.

இந்தநாட்டின் தேசியக்கட்சிகள் எனக் கூறிக் கொள்ளும் ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீ ல. சு. கட்சியும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கும் விரோதமாகவே இருந்துவருகின்றன.

இன்றைய அரசு முஸ்லிம்களின் அரசியல்பலத்தைக் குறைப்பதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது.

முஸ்லிம்கள் பலவகையிலும் இந்த அரசின் அநீதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வரலாறுதெரிந்தும் உண்மைகள் புரிந்திருந்தும் உண்மை நிலைப்பாட்டை நாம் ஏற்க மறுக்கிறோம்.

அம்பாறை மாவட்டத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் முஸ்லிம்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டு வந்தபோதிலும் இன்று தமிழ்ப் போராளிகளின் ஆயுதப் போராட்டமே குடியேற்றத் திட்டங்களைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த உண்மையை நாம் மறைத்துவிட முடியாது'.

—இவ்வாறு அவர் கூறினார். (இ-14)

# நாவலடிக் கிராமத்தில் குடிசைகள் எரிப்பு

## வசிப்பிடங்களைப் பார்க்கச் சென்றோர் விரட்டியடிப்பு

வடமராட்சி ஜூலை 22

உடுப்பிட்டியில் இருந்து வல்லை செல்லும் வீதியில் சுமார் 200 யார் தூரத்தில் உள்ள நாவலடி என்னும் கிராமத்தில் உள்ள வறிய மக்களின் ஓலைக் குடிசைகளுக்கு சிப்பாய்கள் தீ வைத்துள்ளனர்.

கல்வீடுகளைத் தகர்ப்பதற்காக இரு புல்டோசர்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அக்கிராம மக்கள் யாழ் வானொலியின் வேண்டுகோளைச் செவிமடுத்து தங்கள் வீடுகளுக்குச் சென்றபோதே தங்கள் வீடுகள் எரிக்கப்பட்டு, உடைமைகள் சேதமாக்கப்பட்டிருப்பதைக் கண்டனர்.

வீடுகளைப் பார்க்கச் சென்றவர்களை சிப்பாய்கள் வெருட்டிக் கலைத்தனர் என்று கூறப்படுகிறது. (இ-160)

## சிப்பாய்களின் நடமாட்டத்தால் பதற்றம்

நெடுங்கேணி, ஜூலை 22

டொலர்பாம், சென்ட்பாம் முகாமிலுள்ள சிப்பாய்கள் நெடுங்கேணிக்கு அண்மையில் உள்ள காடுகளில் நடமாடுவதாலும் ஹெலிக்கொப்டர் அடிக்கடி அப்பகுதியில் நடமாடுவதாலும் நெடுங்கேணிப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. (இ-108)

## அடையாளம் காணப்பட்டது

நெடுங்கேணிக்கு அண்மையிலுள்ள காட்டில் ஒரு மனித எலும்புக்கூடு கண்டு எடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆறுமாதத்திற்கு முன்பு 150 ரூபா பெறுமதியானசெத்தல்மிளகாயுடன் காணாமற்போன குளவிசுட்டானைச் சேர்ந்த முருகுப்பிள்ளைபாலேந்திரன் (வயது 12) என்பவரின் எலும்புக்கூடு இதுவாகும். (இ-108)

## கடமை நேரம் கைதானார்

கல்முனை, ஜூலை 22

கல்முனை ஆதார வைத்தியசாலை ஊழியரான திரு. எம். ரதனன் என்பவரை கடமை நேரத்தில் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படையினர் கைது செய்து கொண்டு சென்று முகாமில் வைத்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க பெரியபோரதீவு—முனைத்தீவு சக்தி வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபையின் சாலை பரிசோதகருமான திரு. கே. எஸ். சந்திரசேகரம் என்பவரும் கடமை நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-84)

# கிழக்கில் தேர்தலை ஒத்திவையுங்கள்

## முஸ்லிம் கவுன்ஸில் ஜனாதிபதியைக் கேட்கிறது

கொழும்பு, ஜூலை 22

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் ஜனாதிபதி பிரதமர் ஆகியோரைக் கோரியுள்ளது.

கவுன்ஸிலின் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஹோட்டல் ரன் முத்துவில் நடைபெற்றது.

கூட்டத்துக்குக் கவுன்ஸில் தலைவர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தலைமை வகித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது கிழக்கிலங்கையில் நிலவும் தமிழ் - முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் என்றும் தேர்தல்களை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-எ)

# யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு

## அமைய நிவாரண வேலைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ் பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு உடைகள், சவர்க்காரம் ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

தென்மராட்சியில் கொடிகாமம், வரணியுட்பட 30 முகாம்களிலுள்ள சுமார் 12 ஆயிரம் பேருக்கும்—

வலி கிழக்கு, வடக்கு பகுதியில் அச்சுவேலி, ஆவரங்கால், போப்பாய் உட்பட 20 முகாம்களிலுள்ள 6 ஆயிரம் பேருக்குமாக மொத்தம் இதுவரையில் 18 ஆயிரம் பேருக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

இவ்வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்காக அமையத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த உடுபுடைவை சேகரிப்பு வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டன.—இவ்வாறு அமையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

வடக்கு, கிழக்கு, வன்னியில்

# 35சத வீதம் அரசின் கட்டுப்பாட்டில் லலித்

கொழும்பு, ஜூலை 22

கிழக்கு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் எல்லாமாக 35சத வீதப்பிரதேசம் அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி முன்கண்டவாறு சொன்னார்.

பதுளையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனை வெளியிட்டார்.

பாதுகாப்பைப் பலப்படுத்த நான்கு ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகள் தான் இன்று பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனைப்பந்தி மெ.மி த. க. பாடசாலையில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர் திரு. ச. கைலாயபிள்ளையின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

இவ்விழா எதிர்வரும் 24 ஆம் திகதி பி. ப. 2-30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவவிஞயகமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

மக்கள் முகம்

## கோண்டாவில் கிழக்கு பிரசைகள்குழு

குருநகர், ஜூலை 22

கோண்டாவில் கிழக்குப் பகுதி பிரசைகள் குழு அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்றது.

நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு து. சிவசுந்தரம், உபதலைவர்: திரு. இ. பாலசுந்தரம், செயலாளர்; திரு தி. புவனசுந்தரராசா, உப செயலாளர்: திரு. இ. குலசிங்கம், பொருளாளர்: திரு. செ. பஞ்சலிங்கம்.

பத்துப் பேர் அடங்கிய நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

# முல்லைத்தீவு சம்பவங்களின்போது 10வயது முஸ்லிம் சிறுவனும் காயம்

வவுனியா, ஜூலை 22

முல்லைத்தீவு நீராவிப் பிட்டியில் இடம் பெற்ற இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த 10 வயது முஸ்லிம் சிறுவன் ஒருவன் சனிக்கிழமை வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்பு ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

மொகமட்காசிம் ரபீக் என்ற இச் சிறுவன் கடந்த வியாழனன்று படுகாயமடைந்த சம்பவம் தொடர்பாக சிறுவனுடன் சம்பவதினம் வந்தவர்கள் தெரிவித்த தகவல் வருமாறு:-

மாலை 5-30மணி இருக்கும்; முள்ளியவளை நீராவிப்பிட்டி பள்ளிவாசல் மார்க்கக் கல்விப் பாடசாலையில் இருநது வீடு திரும்பிக் கொண்டிருந்தோம்; திடீரென அப்போது அவ்விடத்தில் தென்பட்ட இராணுவத்தினர் எங்களைப் பார்த்து ஓடும்படி கூறினார்கள்.

நாங்கள்ஓடத்தொடங்கியதும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இதில் பத்துப் பேராவது கொல்லப்பட்டிருக்கலாம்.

இப்படிஅவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த இச்சிறுவனை மீட்ட இவனது உறவினர்கள் அன்றிரவுப் பொழுதைக் காட்டில் கழித்தார்களாம். வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சிறுவன் அனுமதிக்கப்பட்டு பொலீஸ் விசாரணையின் பின்னர் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டான்.

இது இவ்வாறிருக்க கடந்த வியாழனன்று முள்ளியவளை, நீராவிப்பிட்டி பகுதிகளில் தேடுதல் நடத்திய இராணுவத்தினரை எதிர்த்து தீவிரவாதிகள் நடத்திய நேரடியான மோதலில் 6 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயமடைந்தனர்.

இம் மோதலின் போது முள்ளியவளை, நீராவிப்பிட்டி தண்ணி முறிப்பு பகுதிகளில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் காயம் அடைந்தவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் ஹெலிக்கொப்டரின் உதவியுடன் மீட்டுக் கொண்டு தண்ணி முறிப்புப் பகுதிக்குப் பின் வாங்கினர்கள்.

தேடுதல் நடத்திய இடங்களில் கைதுசெய்யப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களையும் இராணுவத்தினர் தம்முடன் கடல்மார்க்கமாக கொண்டு சென்றனர் என்று கூறப்படுகிறது.

தண்ணிமுறிப்பு கடற்கரை பகுதிக்குச் சென்றபோது, இராணுவத்தினரைக் கண்டு அச்சத்தால் மறைய முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவரையும் சுட்டுக்கொன்று சடலத்தை அங்கிருந்த நீர்த் தொட்டியில் இராணுவத்தினர் போட்டுவிட்டுச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

இத்தவேளையில் மூன்றும் கட்டைப் பகுதியில், இரத்தக் கறைகளுடன் லொறி ஒன்று கைவிடப்பட்டிருந்தது.

வற்றுப்பளை கண்ணகை அம்மன் கோவிலில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகளைப் பற்றி அறிவதற்காக வவுனியா வந்தவர்களே மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்கள். (இ-164)

Diploma in Nursing
தாதிப் பயிற்சி நெறியில்
டிப்புளோமா
7ஆம் பகுதிக்கான விரிவுரைகள்
ஆரம்பம்:- 1st August 1987
North Ceylon
Technical Institute
14, St. Peters Lane,
Jaffna.

ஜீ. சி. ஈ. பரீட்சை

# வடமராட்சியில் தோற்ற முடியாத மாணவருக்கு சலுகை

யாழ்ப்பாணம், ஜூலை22

எதிர்வரும் ஜீ. சி. ஈ. பரீட்சைக்கு விண்ணப்பித்து வடமராட்சியில் பாதிக்கப்பட்டதனால் பரீட்சைக்குத் தோற்ற முடியாத பரீட்சார்த்திகளுக்கு இப்பரீட்சை ஒரு தோற்றுதலாகக் கணிக்கப்படமாட்டாது.

அதாவது அவர்கள் இம்முறை பரீட்சை எழுதாவிட்டால் பரீட்சைக்குத் தோற்றியதாகக் கருதப்படாமல் இருப்பதற்காக தவிர்ப்புச் சலுகை வழங்கப்படும்.

இத்தவிர்தலுக்கு விண்ணப்பிக்கும் கடைசித் தினம் 25 ஆம் திகதி ஆகும். இவ்விண்ணப்பத்தில் பின்வரும் நிபந்தனைகள் கவனிக்கப்படல் வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் வடமராட்சியிலுள்ள பாடசாலைகளில் கற்பவராகவோ, அங்கு வசித்தவராகவோ, அங்கு வசித்த வண்ணம் அயற்பிரதேசப் பாடசாலைகளில் கற்பவராகவோ இருந்து இடம் பெயர்ந்தவராய் இருத்தல் வேண்டும்.

2. இவ்வாறு இடம் பெயர்ந்தமைக்கும் வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டமைக்குமான ஆதாரமாக பாடசாலை மாணவர் தபது அதிபரா லோ தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராமசேவையாளர் உதவிஅரசாங்க அதிபர் ஆகியோராலோ உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3. இவ்வுறுதியுடன் பரீட்சார்த்திகள் தமது சுட்டிலக்கம், நிரந்தரமுகவரி, தற்காலிக முகவரி என்பவற்றோடு தாம் பரீட்சைக்குத் தோற்றவியலாமைக்கான காரணத்தையும் காட்டிப் பரீட்சை ஆணையாளருக்கு கல்விப்பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

4. வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்தோர் யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஊடாகவும்—

பிற பிரதேசங்களுக்குக் குடிபெயர்ந்தோர் தாம் தற்போது வசிக்கும் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். (உ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

பாலர் கல்விக் கழகத்தின் ஆதரவில் யாழ் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் முதலுதவிப் பரீட்சையில் தோற்றிச் சித்தியெய்தியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை யாழ் சன்மார்க்கப் பாடசாலையில் நடைபெற்றது.

பாலர் கல்விக்கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு ஓய்வு பெற்ற ஆணையாளர் கலாநிதி ஈ. பீ. இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்த ந. நகுல்ராஜ் பேசுகையில்; முதலுதவி தற்போது நிலவும் கால கட்டத்தில் மிகவும் அத்தியாவசியமானது, என்றார். (இ)

பிரயாண ஒழுங்குகள்
★ குவைத் ★
KUWAIT

● பின்வரும் வெற்றிடங்கள் எம்மிடம் உடனடியாக நிரப்ப இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✱ ஆண் ✱ பெண்
இரு பாலாருக்கும்
ஓர் அரியசந்தர்ப்பம்

✱ ஆஸ்பத்திரி வேலையாட்கள்
HOSPITAL CLEANERS

1. Male Cleaners ஆண் வேலையாட்கள்
2. Male Supervisors ஆண் மேற்பார்வையாளர்
3. Female Cleaners பெண் வேலையாட்கள்
4. Female Supervisors பெண் மேற்பார்வையாளர்

✱ 3 வருட ஒப்பந்தம்
✱ இலவச தங்குமிடவசதி
✱ ஒருவருட முதிர்வின் பின் விடுவந்து செல்ல பிரயாணச்சீட்டு வசதி
Return Ticket (First Class)

● பின்வரும் ஆவணங்களுடன் உடனே வரவும்

I. பாஸ்போட் Pass Port
II. பாஸ்போட் போட்டோ பிரதி PassPort Photo Stat
III. கிராமசேவையாளரின் நற்சான்றுப் பத்திரம் Grama Sevaga Certificate
IV. பாஸ்போட்சைஸ்-புகைப்படம்07(ஏழு) Pass Port Size Photo 0

● இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய குறிப்பு:-
★ எக்காரணம் கொண்டும் வேறு முகவர் ஊடாக வரும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

தலைமை அலுவலகம்:
Construction & Development Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA NUGEGODA.
Labour Licence No. 96

★ BEN ENGINEERING CORPORATION — KUWAIT
இதற்கு வேலையாட்கள் Labourers இன்னமும் தேவையாக இருக்கின்றபடியால் விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

LABOURERS 40 K. D.
★ இலவச தங்குமிடவசதி
★ இலவச உணவு வசதி
★ நாலு வருட ஒப்பந்தம்
★ இரண்டு வருட முதிர்வின் பின் வீடு வந்து செல்ல பிரயாணச் சீட்டு வசதி

தொடர்பு:
V. P. Balasubramaniam
(V. P. BALA)
C/o N. V. PONNUTHURAI
School Lane,
KONDAVIL WEST.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

'இது வேண்டும்: அதுவேண்டும்' என்று ஆண்டவனைக் கேட்காதே. எல்லாம் உன் இஷ்டப்படி என்று அவனுக்கு விட்டுவிடு.
— ராஜாஜி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
22.07.1987 த.பெ.இல: - 23

## தெற்கின் இடதுசாரிகள்

கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில், இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான திரு. சண்முகதாசன் வெளியிட்ட கருத்து எல்லோரது கவனத்திற்கும் உரியது.

வடக்கில் மக்கள் கொல்லப்படுகிறார்கள். அரசாங்கம் தனது சொந்த மக்களில் ஒரு பிரிவினரைக் குண்டு வீசி அழிக்கிறது. மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்கள் அநியாயமாகக் கொன்று குவிக்கப் படுகிறார்கள்.

அரசின் இந்த அட்டூழியங்களைக் கண்டித்து தெற்கில் இடதுசாரி இயக்கம் இன்னமும் ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தானும் நடத்தவில்லை. இது பெரும் வெட்கத்துக்கு உரியதாகும், இலங்கை இடதுசாரி இயக்கத்தில் நாற்பது வருடங்களுக்கு மேலாக அங்கம் வகிக்கும் ஒருவன் என்ற வகையில் இது குறித்து நான் வெட்கித் தலை குனிகிறேன்.

இவ்வாறு திரு. சண்முகதாசன் தெரிவித்திருக்கிறார்.

எல்லா மக்களும் சமம் என்பதும், ஒருவரை மற்றவர் ஒடுக்கி வைக்கவோ அல்லது சுறையாடவோ கூடாது என்பதும் இடதுசாரிக் கோட்பாடுகளில் சில. ஓர் இனத்தை மற்ற இனம் அடக்கி ஆளாது, சகல உரிமைகளையும் வழங்கி சமத்துவமாக வாழ இடந்தர வேண்டும் என்பதும் இடதுசாரிக் கோட்பாடு ஆகும். சிறுபான்மை இனங்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க இடமளிக்க வேண்டும் என்பது இடதுசாரிய சித்தாந்தங்களில் ஒன்றாகும்.

ஈழத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இங்குள்ள இடதுசாரிகளில் பல பிரிவினரும், ஆரம்பத்தில் தமிழர்களின் மொழி நில உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நியாயபூர்வமாக இருந்தனர். தமிழர்கள் இலங்கையில் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும் என்றும் வாதாடினர். பல இடதுசாரிக் கட்சிகள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழருக்குச் சம உரிமை வேண்டும் என்றுகூட வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால் காலப்போக்கில் அதன் தலைவர்கள் தமது அரசியல் சுயலாபத்தைக்கருதி, இடதுசாரிக் கோட்பாடுகளுக்கு முரணாக வகுப்புவாதத்தில் மூழ்கியது எல்லோரும் அறிந்த ஒன்றே.

ஆங்கிலேயர்கள் சிறுபான்மை மக்களுக்கு விட்டுச் சென்ற எச்ச சொச்சமான சட்டரீதியான பாதுகாப்புகளைப் பறிக்கும் 1972 ஆம் ஆண்டின அரசமைப்புச் சட்டத்தை யாத்தவர் ஓர் இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர். டி. சில்வாவே ஆவார்.

அன்று தொடக்கம் இன்று வரையும் இடதுசாரித் தலைவர்கள் தமிழர் பிரச்சினையில் உறுதியாக நின்றது மிகக் குறைவு. 1983 ஆம் ஆண்டின் பின்னர் இன்று வரை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பங்கள், உயிர் உடைமைகளின் அழிவுகள் எழுத்தில் வடிப்பதற்கு அடங்காதவை.

காலஞ்சென்ற திரு. சரத் முத்தெட்டுவேகம நாடாளுமன்றத்தில் தமிழர்கள் படும் அவலங்களை அம்பலப்படுத்தினார் என்பது உண்மை.

ஆனால் தமிழர்கள் படும் அவலங்களை அகற்றக்கூடியதான தாக்கத்தை ஏற்படுத்த வல்ல எந்தவித போராட்டத்தைத் தானும், தென்னிலங்கை இடதுசாரிகள் நடத்தவில்லை. வாய்ப் பேச்சிலும், எழுத்திலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்று ஒரு சாரார் கூறிவந்த போதிலும் அது குறித்து தென்னிலங்கை மக்கள் மத்தியில் சர்வரப் பிரசாரம் தானும் செய்யப்படவில்லை. தமிழ் மக்கள் மீது அரசாங்கம் அவிழ்த்துவிட்ட காட்டுமிராண்டித் தனங்களைக் கண்டித்து அரசுக்கு எதிரான போராட்டம் எதையும் தென்னிலங்கை இடதுசாரிகள் முடுக்கிவிட்டதும் இல்லை.

இதற்கு இரண்டு காரணங்களை ஊகிக்கக்கூடியதாக உள்ளது. தமிழர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று துணிந்து வெளிப்படையாகச் சொன்னால், தெற்கில் அரசியல் செல்வாக்கு குறைந்து போய்விடும் என்ற முந்திய அனுபவம் அதில் முதலாவது. அரசாங்கத்துக்கு எதிராக ஒரு தாக்கம் தரவல்ல போராட்டத்தை (தமிழர் அவலங்களை முன்வைத்து) நடத்தக்கூடிய மக்கள் ஆதரவும், செல்வாக்கும் தென்னிலங்கையில் இடதுசாரிகளுக்கு இல்லை என்பது இரண்டாவதாகும்.

ஒரு தமிழரான சண்முகதாசன், பிரபல தொழிற்சங்கத் தலைவராக இருந்தும் கூட, ஒருநாள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையேனும் நடத்த முடியாமற் போய் விட்டது என்றால், தென்னிலங்கையில் பேரினவாதமும், வகுப்புவாதமும் எந்த அளவுக்கு வேரூன்றி வளர்ந்திருக்கின்றன என்பது நன்றாகப் புலனாகின்றது.

எவனும் இடதுசாரிகள் திரிகரண சுத்தியுடன் தமிழர் நலனில் அக்கறை காட்டினால் அதனால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை எதிர்த்துரைக்க முடியாது.

ஆயினும் தென்னிலங்கை இடதுசாரிகள் இனியாவது இதில் இதயசுத்தியுடன் செயற்படுவார்களா என்பது கேள்விக்கு உரியதே!

# கூர்க்காலந்து பற்றிய முக்கிய பேச்சு இன்று

## பிராந்திய சுயாட்சி அல்லது யூனியன் பிரதேச அந்தஸ்து?

புதுடில்லி, ஜூலை 22

கூர்க்காலந்து அமைக்கும் கோரிக்கை குறித்து இன்று புதன்கிழமை புதுடில்லியில் முக்கிய பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணியின் தூதுக்குழு ஒன்று அதன் தலைவர் சுபாஷ் கிஷிங் தலைமையில் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேச்சுக்களை நடத்தும்.

பேச்சுக்களில் மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு மத்திய உள்துறை அமைச்சர் பூட்டா சிங் ஆகியோர் கலந்து கொள்வர்.

கூர்க்காலந்துமுன்னணியின் தூதுக்குழுவில் 42உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர்.

கூர்க்காலந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது குறித்து ஏற்கனவே இரு தரப்பினருக்கும் இடையே நடந்த பேச்சுக்களில் உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்த அடிப்படையில் தான் இன்று பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

அடுத்த செப்டம்பருக்கு இடையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விடும் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் டார்ஜீலிங் மாவட்டத்துக்கு பிராந்திய சுயாட்சி அல்லது யூனியன் பிரதேச அந்தஸ்து வழங்கி இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படலாம் எனறு ஊகிக்கப்படுகின்றது. (இ-எ)

### வெளி உலகில்

## இலங்கைத் தமிழர் பிரச்சினை:
## மொரீஷியஸ் கவலை

போர்ட் லூயி, ஜூலை 21

மோசமடைந்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மொரீஷியஸ் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

போர்ட்லூயிக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரியிடம் மொரீஷியஸின் கவலையை அந்நாட்டு பொருளாதார, திட்டமிடல் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையில் 6 கோடி ரூபா செலவில் மொரீஷியஸில் இரண்டு நவீன ஆஸ்பத்திரிகளைக் கட்டிக்கொடுக்க இந்தியா சம்மதித்துள்ளது.

இந்த ஆஸ்பத்திரிகளில் ஒன்றுக்கு 'ஜவஹர்லால் நேரு ஆஸ்பத்திரி' என்றும் மற்றதுக்கு 'சுப்பிரமணிய பாரதி ஆஸ்பத்திரி' என்றும் பெயர் சூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

### மீண்டும் ஆட்சியில்

லிஸ்பன், ஜூலை 21

போர்த்துக்கலில் சோஷலிச ஜனநாயகக் கட்சியே மீண்டும் பதவிக்கு வந்தது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் இக்கட்சிஅறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது. (இ-எ)

## வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐ. நா. வேண்டுகோள்

வாஷிங்டன், ஜூலை 21

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும்படி ஐ நா. பாதுகாப்புச்சபை, ஈராக், ஈரான் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

வளைகுடா யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும்படி கோரும் பிரேரணை கடந்த திங்கள் நடந்த ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச எல்லைக்குப் படைகளை விலக்கிக் கொள்ளும்படியும் இரு நாடுகளுக்கும் ஐ நா. பாதுகாப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தைச் செயல்படுத்துவதில் ஐ நா பொதுச் செயலாளருக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி இரண்டு நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தவேண்டுகோளை உதாசீனப்படுத்தும் நாடுகள் மீது ஆயுதத் தடையை விதிக்கக் கோரும் இரண்டாவது பிரேரணை மீதான விவாதம் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இப்பிரேரணையை சீனா எதிர்த்து இருப்பதாகக் கூறப்படுகின்றது. (இ-எ)

## வி.பி. சிங் ஆதரவாளர் பலர் களையெடுப்பு

லக்னோ, ஜூலை 21

உத்தரபிரதேச மாநிலத்தில இந்திரா காங்கிரஸ் கட்சியில் வி.பி.சிங் ஆதரவாளர்கள் களை எடுக்கப்பட்டு வருகின்றனர்.

இதுவரை மூன்று மாநில அமைச்சர்கள் பதவிவிலக்கப்பட்டனர்.

வி. பி சிங்கின் ராஜினாமாவினால் உத்தர பிரதேச மாநில இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படாது என்று அறிவிக்கப்படுகின்றது.

திரு.வி.பி.சிங் உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## கடற்கண்ணி அகற்றப்பட்டது

குவைத், ஜூலை 21

வளைகுடாவில குவைத் எண்ணெய்க்கப்பல் போக்குவரத்தைத் தடுக்கும் நோக்குடன் ஈரான் விதைத்து இருந்த கடல் கண்ணிகள் அகற்றப்பட்டன.

இப்படி குவைத் அரசு அறிவித்துள்ளது.

ஈரான் — ஈராக் யுத்தத்தில் குவைத் ஈராக்கை ஆதரிக்கின்றது. (இ-எ)

### விசித்திரம்

என்ன, முரளியார் வந்தாச்சோ?

ஒரு கப் தேத்தண்ணீர் குடியுமென். நல்லாக் களைச்சமாதிரி இருக்கு. எங்கே கன தூரமோ போயிட்டு வாறீர்?

வெய்யில் அகோரம்; வெளியிலை போகாமல் இருக்கவே பெரிய களைப்பும், இளைப்புமாய் இருக்குது. போத்தில் போத்திலா தண்ணீர் குடிச்சாலும் தாகம் தீருதில்லை. ஆடி மாதமே உப்பிடி எண்டால், ஆவணி, புரட்டாசியிலை எப்பிடி இருக்கும் என்டு நினைச்சுப் பார்க்கவே பயமாய் இருக்குது.

போன வருஷம் மழை குறைவு. அதாலை இந்த முறை முந்தி வருகுதோ என்னவோ?

ஆட்சி நல்லாய் நடந்தால், தர்மமாய் நடந்தால், நீதி நிலைநாட்டப்பட்டால் மழையும் தவறாமல் வரும். அரசனின் கோல் வளைந்தால் இயற்கை பொய்க்கும்எண்டு தெரியாமலே எங்கடை தமிழ்ப் புலவர்கள் சொன்னவை?

சரி தேத்தண்ணி குடிச்சிட்டீரோ? இப்ப தேத்தண்ணி எண்டு ஏதோ சாயத் தண்ணியைத் தானே குடிக்கவேண்டியிருக்கு. விலை எண்டால் நாலு மடங்கு. ஆனால் தரம் எண்டால் பூச்சியத்துக்குக் கீழே. அது திறம், இதுதிறம் எண்டு என்னென்னவோ ''பிராண்டுகள்'' எல்லாம் விக்கினம். எதை வாங்கினாலும் ஒண்டுதான்.

தேத்தண்ணியைக் குடிச்ச உடனை, நாக்கிலை ஒரு கைப்புத் தன்மை. உப்புப் பேதி குடிச்சாலும் அப்பிடியிருக்காது. நல்ல இலைத் தேயிலையை எல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்குது அரசாங்கம்! இஞ்சை தேயிலைத் தொழிற்சாலையிலை நிலத்திலை கொட்டுண்ணும் ''டஸ்ற்''றைத்தானே விக்கினம். கூட்டி எடுக்கிற ''சுவீப்'' தேயிலையும் வருகுது. யாழ்ப்பாணம் வாற ''டஸ்ற்''றுக்கையும் ''சுவீப்புக்கையும்'' ஏதாவது கலந்துவிடுகினமோ ஆர்கண்டது!

தேத்தண்ணிக்குப் பதிலா, பழையகாலம் மாதிரி நன்னாரிவேர், அப்பிடி இப்பிடி எண்டு ஏதாவது குடிச்சால் தான் நல்லதுபோலை வருகுது.

★ ★ ★

நல்லூரிலை நடந்த கம்பன் விழாவைப் பற்றி நேற்றைக்கு உனக்கு நிறையைச் சொன்னேன். ஆனால் ஒண்டை மட்டும் சொல்ல மறந்திட்டன்.

கடைசி நாளண்டு கூட்டமோ கூட்டம்! நல்லை ஆதீன வெளி மண்டபம் கொள்ளாமல் சனம் நிரம்பி வழிஞ்சுது. ஆனால் கூட்டம் முடிஞ்சு போகயிக்கை சில பேர், செருப்போடை வந்தவை வெறுங்காலோடு போச்சினமாம்.

நாம் படிச்ச சமூகம், அப்பிடி இப்பிடி எண்டு எல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்? கோயிலுக்கும், விழாவுக்கும் போய் பழைய செருப்புக்குப் பதில் புதிய செருப்பு மாட்டிக் கொண்டு போறதும், செருப்பில்லாமலே போய் செருப்போடை வீடு திரும்பிறதும் இன்னும் ஒழியவில்லை. அவனவன் பொருளை அவனவன் அனுபவிக்க இடம் கொடுக்க வேணும் எண்ட பண்பு இன்னும் எங்களிட்டை மலரயில்லை. மற்றவன் பொருளுக்கு ஆசைப்படுகிற சின்னத்தனம் எங்களிட்டை இருந்து விடுபடும் வரைக்கும், எங்கடை உரிமையளை மற்றவன் பிடிச்சு வைச்சிருக்கிற போக்கு மாறுது. இந்தத்தரித்திரம் எங்கள் மத்தியில் இருந்து நீங்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பரசூட் படைவீரர்கள் மலையகத்தில் இறங்கத் தயாராக இருந்தனர்

காணிப் பிரச்சினை உணர்ச்சி பூர்வமானது.

அரசு அமுல் நடத்தும் பெரிய குடியேற்றத் திட்டங்களில் இன விகிதாசாரப்படி காணிக் குடியேற்றங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா இன்னும் உறுதியாக உள்ளது.

ஆனால் இப்படியான குடியேற்றத் திட்டங்களில் இனவிகிதாசாரப்படி ஒதுக்கப்படும் இடங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும்.

உதாரணமாக தென் இலங்கையில் உள்ள லுணுகம்வெஹெரா குடியேறறத் திட்டத்தில் தமிழர்களுக்கு ஒதுக்கப்படும் காணியை அங்குள்ள சிங்கள மக்களுக்கு விட்டுக் கொடுக்கலாம்.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களுக்கு ஒதுக்கும் காணிகளை தமிழருக்கு விட்டுக் கொடுக்கலாம்.

புரிந்துணர்வு, நம்பிக்கை ஏற்படும்போது இந்த நடைமுறை சாத்தியமாகும். எல்லாம் நன்மையாக முடியும் என்று எண்ணுபவர்களின் நம்பிக்கை இது.

கிழக்கில் ஓராண்டின் பின்னர் நடத்தப்பட இருப்பதாகக் கூறப்படும் சர்வசன வாக்கெடுப்பை கண்காணிக்க ஐ. நா., இந்தியா ஆகியவற்றின் அவதானிகள் குழு அழைக்கப்பட வேண்டும் என்ற யோசனை குறித்து இந்தியா அக்கறை காட்டவில்லை.

''இது இலங்கை விஷயம். வெளியார் ஒருவரும் சம்பந்தப்படக் கூடாது''— இதுதான் இலங்கைக்கு வழங்கப்பட்ட செய்தி.

### ஏன் இந்தத் திடீர் மன மாற்றம்?

கொழும்பில் ஏன் இந்தத் திடீர் மனமாற்றமும் அவசர நடவடிக்கையும்?

> இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பிந்திய யோசனைகள் பற்றி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவும் கருத்துக்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் இது.
>
> இதை 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் 'இன்சைடர்' எழுதியிருந்தார்.

பாரிஸில் நடந்த உலக வங்கிக் கூட்டம் இலங்கைக்கு 62 கோடி 50 லட்சம் டாலர் நிதி உதவி வழங்கத் தீர்மானித்தது.

நாட்டில் அமைதி நிலவி இருந்தால் இந்த உதவித் தொகை இரட்டிப்பாக இருக்கும் என்று நிதி அமைச்சர் ரொனி டி மெல் சொல்கின்றார்.

உதவி தொடர்ந்து கிடைக்கவேண்டுமானால் இந்தியாவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து இனப்பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வு காணப்பட வேண்டும் என்று பல உதவும் நாடுகள் இலங்கைக்குக் கூறிவிட்டன.

இதிலும் பார்க்க இன்னும் முக்கியமான விஷயங்கள் இருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [illegible] தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடாக இலங்கை இருக்கலாம். ஆனால் உலகிலே அதிகத் தேயிலையை உற்பத்தி செய்யும் நாடு இந்தியா.

இந்தியா தன்னிடமுள்ள தேயிலையைப் பெரும் தொகையாக ஏற்றுமதி செய்யத் தொடங்கினால் உலகத் தேயிலை சந்தையில் இலங்கைக்குப் பெரும் நாசம் ஏற்படும்; பொருளாதாரநெருக்கடி உருவாகும்.

### இரண்டாவது நெம்புகோல்

இந்தியாவின் இரண்டாவது நெம்புகோல் இந்தியாவின் ஐந்தாம் படையாகக் கருதப்படும் இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள்.

தேயிலைத்துறையைஒரு வேலை நிறுத்தத்தினால் அழித்துவிட முடியும்.

அண்மையில் யாழ்குடாநாடு மீது இந்திய விமானங்கள் நிவாரண உணவுப் பொதிகளைப் போட்டன.

இதற்குப் பதில் நடவடிக்கையாக மலையகத் தமிழர்களை சிங்களவர்கள் தாக்கும் பட்சத்தில் மலையகத்தில் இந்திய பரசூட் படைவீரர்கள் குதித்து மலையகத் தமிழரைக் காப்பாற்றத் தயாராக இருந்தனர். இப்படி அரசுக்கு புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்தன.

சுகயீனமாக உள்ள முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரனின உடல்நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்று இந்திய டாக்டர்கள கருதுகின்றனர். அப்படி முதலமைச்சர் இராமச்சந்திரனுக்கு ஒன்று நடந்து விட்டால்... என்ற நிச்சயமற்ற நிலை தான் இந்தியாவுக்குக் கவலையாக உள்ளது.

தான் விருப்பியபடி தான் முதலமைச்சர் இராமச்சந்திரன் போராளிகளுக்கு மனிதாபிமான உதவிகளை அளித்தார் என்று காட்ட இங்கு முயறசிக்கப்பட்டது.

ஆனால் திரு. இராமச்சந்திரனின செயலுக்கு மத்திய அரசும் சம்மதம் தெரிவித்திருந்தது.

இந்த ஜாடையை இலங்கை ஏற்க மறுத்தது. அதைத் தொடர்ந்து தான் இந்தியப் படகுகள் அணி புறப்பட்டது.

தன்னிச்சையான நடவடிக்கை பிரச்சினையைத் தீர்க்காது என்பதைக் காட்டவே வலிமையைக் காட்டி விமானமூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டன.

ஐ.தே.க. ஆட்சிக்கு வந்து பத்தாவது வருட நிறைவு இந்த வாரம் கொண்டாடப்படுகின்றது.

தமிழ் போராளித்துவத்தின் ஓர் அம்சமாக 13 சிப்பாய்களை யாழ்ப்பாணத்தில் கொலை செய்தது 23– 7- 1983 இல் இது தற்செயலானது அல்ல.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படாமல் இருந்தால் 1977 இல் தோதவில் பதவிக்கு வந்த ஐ தே. க. அரசின்பதவிக் காலம் 23-7-1983 இல் முடிவடைந்து இருக்கும்.

போராளி இளைஞர்கள் ஜனநாயக வழியில் நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதைக் காட்டும் முகமாகவே 23– 7– 1983 சம்பவம் இடம் பெற்றது.

டிசம்பர் 19 யோசனைகளிலும் பார்க்க கூடுதல் சலுகைகளை பெற்றெடுக்க பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஆனால் உருவாகும் திட்டம் எதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்பார்களா? என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

### வயிற்றை நிரப்பி...

இந்த இடத்தில்தான் இந்தியர்கள் வடபகுதி விவகாரத்தில் பிரவேசித்துள்ளார்கள்.

வயிற்றை நிரப்பி வடபகுதி மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். அந்தப் பலனை இப்போது பயன் படுத்துவார்கள்.

விட்டுக் கொடுப்பதற்கு இது சிறந்த ஒரு தருணமா? என்பது குறித்து சில வட்டாரங்களில் சந்தேகம் எழுப்பப்பட்டுளளது.

சண்டை நடக்கும் இடத்தில் இருந்து வெளியேறிய தமிழர்கள் 1983 1986க்கு இடைப்பட்ட காலத்தில் முதல் படகை

(4 ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

**குறள்:**
தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

**பொருள் :**
யாரையும் ஆராயாமல்தெளியக்கூடாது. நன்றாக ஆராய்ந்த பிறகு, அவரிடம் தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ நெகடிவ் (Proce sing) செய்தல் இலவசம்
★ விற்பனை – வர்ண நிழற்பட சுருள்கள்
KOD K – UJI – KONICA
TUDO – TO TE
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

22 07 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## வவுனியா ஆஸ்பத்திரியில் ஒரு சோகக் கதை:

# கணவனையும், குழந்தைகளையும் இழந்து கைக்குழந்தையுடன் வாடும் இளம்பெண்

வவுனியா, ஜூலை 22
சுமார் 55 நாட்களாக தனது இரண்டு குழந்தைகளுக்கும் கைப்பிடித்த கணவனுக்கும் என்ன நடந்ததுஎன்பதை அறிய முடியாமல் ஏழு மாதக் கைக்குழந்தையுடன் இளம் தாய் ஒருத்தி தவித்துக் கொண்டிருக்கின்றார்.

வவுனியா வைத்திய சாலையில் பெண்கள் காய வார்ட்டான-2 ஆம் இலக்க வார்ட்டில்–சிகிச்சை பெற்றுவரும் நிர்மலா என்றழைக்கப்படும் 30 வயதான வகுலாதேவி என்பவரே அவர்.

இவரது சோக கதை பற்றி தெரிய வந்துள்ளதாவது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வல்வெட்டி வாசியான நிர்மலாவின் கணவனின் பெயர் அன்ரனி மரியதாசன் (30 வயது)

கடந்த மே மாதம் 26 ஆம் திகதி அதிகாலை மீன்பிடிப்பதற்காக கடலுக்கு கணவன் சென்றுவிட்டார் அன்று காலை 6 மணிக்கு திடீர் ஊரடங்கு வடமராட்சிப் பகுதியில் அறிவிக்கப்பட்டது. ஊர்மக்களோடு சேர்ந்து வல்வைகோவில் ஒன்றில் குழந்தைகளான ஆனந்தன் (10 வயது) உதயலக்ஷ்மி (4 வயது) ஆகியோருடனும் அப்போது 5 மாத கைக்குழந்தையோடும் நிர்மலா தஞ்சமடைந்தார்.

இடைவிடாது பொழிந்த விமான, ஹெலி, ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியில் ஏனைய மக்களோடு சிதறியோடி இறுதியாக நெலலியடி மூத்த விநாயகர் கோவிலில் தஞ்சமடைந்தார்.

நள்ளிரவு ஒன்றரை மணியளவில் கோவிலை ஷெல் மற்றும் பீப்பாய்க் குண்டுகள் தாக்கின. இரண்டு பெண்மணிகள் அந்த இடத்திலேயே பலியாகினர். நிர்மலாவையும் ஷெல் தாக்கி காயப்படுத்தியது வலதுகாலில் ஏற்பட்ட காயம் காரணமாக, நடக்க இயலாமல் இரத்தம் பெருக, உதவிகோரி நிர்மலா குரல் எழுப்பினர். அங்கு யாருமே இல்லை. அனைவரும் தம்முயிரைக் காப்பதற்காகச் சிதறி ஓடிக் கொண்டிருந்தார்கள.

மிகுந்த கஷ்டத்துடன் தனது இரு குழநதைகளையும் அழைத்துச் சென்று அருகில் இருநத வீடொன்றின் பதுங்கு குழியில் விட்டுவிட்டு வேதனையால் துடித்துக் கொண்டிருந்த தாயையும், இரத்தத்தினல் தோய்ந்திருநத சிறிய தங்கையையும் ஒருவிதமாக அந்த பதுங்கு குழிக்கு கொண்டு சென்றுள.

அவாகள் சென்ற சிறிது நேரத்தில் அக்கோவிலைத் தாக்கிய இன்னும் ஒரு ஷெல்லினுல கோவில இடிநதது.

நான்கு நாட்கள் பதுங்கு குழியினுளளேயெ கழிந்தது. உணவோ தணணீரோ எதுவுமெ இலலை, இரத்தம் பெருககெடுத்ததாலும் பசி தாகத்தனுலும நிாமலா மயஙகினா. பிஞ்சுக் குழநதைநளும எதுவுமினறி இருநததாலும தொடாநதுகெட்ட தாககுதல வெடியோசைகளாலும மயஙகின.

நாலாம நாள எப்படியோ சமாளித்து வெளியே வந்த சிறுவன ஆனநதன், அஙகு நடமாடிய சிப்பாயகளின உதவியோடு தாயையும தஙகைகளையும பதுங்கு குழிக்குள்ளிருந்து மீட்டெடுத்தான்.

வீடு ஒன்றில் இருந்த சிப்பாய்களின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட நிர்மலாவுக்கு முதலுதவிகள் செய்யப்பட்டு, கைக்குழந்தையும் இரத்தம் போக சுழுவி சுத்தமாக்கப்பட்டது. தாகம் தீர்ந்த பின்பு ஹெலிகொப்டர் ஒன்றில் நிர்மலா ஏற்றப்பட்டார்.

அப்போது தெளிவற்ற நிலையில் சிப்பாய்களோடும் ஒன்றிரண்டு பொது மக்களோடும் சோகமே உருவங்களாக வதங்கி சோர்ந்து நின்ற மகனையும் மகளையும் கடைசியாகக் கண்டார் நிர்மலா. அதற்குப் பின்னர் குழந்தைகளுக்கு நடந்தது என்ன என்பது தெரியவில்லை,

ஹெலிகொப்டர் மூலம் நேரடியாக கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு உடனடி சிகிச்சையின் பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கைக்குழந்தையுடன் நிர்மலா அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து மூன்று தினங்களின் முன்பு வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

காததலிங்கம், கா. நீலாதாச்சியம்மா ஆகியோரே நிர்மலாவின் பெற்றோராவர். இவர்கள் ஏறகனவே அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றுவிட்டார்கள். நிர்மலாவின் கணவனது பெற்றோரின் பெயர்கள் —குருசுமுத்து; நைனம். வல்வெட்டியில் இருந்த இவர்களும் இப்போது எங்கே இருககின்றார்கள் என்பது தொரியவில்லை.

நிர்மலாவின் சோகக் கதையை அறிந்த வவுனியா மாவட்ட சாவோதய இணைப்பாளர் திரு. செலவராஜாவும், வனனி சமாதானக் குழுவின் தலைவரான வகாராதிபதி சியமபலகஸ் வெவ விமலசாரதேரரும் அவரைப் பார்வையிட்டு அவருக்கும் குழநதைக்கும் தேவையான உடனுதவிகளைச் செய்துள்ளார்கள.

வவுனியா ஆஸ்பத்திரி வைத்தியாகள ஊழியர்களும் உரிய உதவிகளைச் செய்துள்ளார்கள்.

உவின்றி, துணையின்றி கைக்குழந்தையோடும் கண்ணீரோடும் இருக்கும் நிர்மலா என்றழைக்கப்படும் வகுலாதேவி, கணவரான அன்ரனி மரியதாசனையும், அவரது மற்ற இரண்டு குழந்தைகளையும் கண்டு பிடித்து ஒன்றுசேர உதவுமாறு அதிகாரிகளையும் பொது நிறுவனங்களையும் வேண்டியுள்ளார்.
(உ–164)

## ஈரான் நிராகரித்தது

தெஹ்ரான், ஜூலை 21
வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபை விடுத்த வேண்டுகோளை ஈரான் நிராகரித்து விட்டது.

இதனை ஈரான் வெளிநாட்டமைச்சு அறிவித்தது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் அநீதியானது என்றும் ஈரான் கண்டித்தது.
(உ–எ)

## ஹெலி மூலம் இடம் மாற்றம்

குருநகர், ஜூலை 22
யாழ் – கோட்டை, மண்டைதீவு 'மினி' முகாம்களுக்கான இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்கள், உணவுப் பொருள்கள் ஆகியன இப்போது ஹெலிகொப்டர்களிலேயே கொண்டு வரப்படுகின்றன.

படையினரின் பரிமாற்றங்களும் வானத்தாலேயே நடைபெற்று வருகின்றது.

குடாக்கடல் வழியாக மேற்படி முகாம்களுக்கு கப்பல்களில் பொருள்கள் எடுத்துவரப் படுவது கடந்த மே மாதம் 25 ஆம் திகதியுடன் நிறுத்தப் பட்டதை அடுத்தே ஹெலி மூலம் இந்த நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.
(உ–ரி)

நீத்தார் பட்டியல்

### இராசையா மகாலிங்கம்

(கொழும்பு – யாழ். ''ராம்சேது அன் கொம்பனி பங்காளர்)

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் பிரப்பங்குள லேன், 58 A, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலம்சென்ற இராசையா தம்பதிகளின் புதல்வரும், புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. பொன்னையா தம்பதிகளின் மருமகனுமாகிய இராசையா மகாலிங்கம் அவர்கள் நேற்று (21-07-87) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தனு, செந்தூர்வாசன், திருத்தணிசசன், சிதம்பரநாதன், செந்தில்முருகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றேகன் றேடர்ஸ் பங்காளர் தருமலிங்கம், காலஞ்சென்ற தில்லைநாதன், காலஞ்சென்ற இரத்தினம், அன்னலிங்கம், சபாரெத்தினம் (மே.ஜேர்மனி) கமலாம்பாள், நிர்மலானந்தராணி, இராஜேஸ்வரி, கதிர்காமலிங்கம் (மே. ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யாழ் விநாயகர் ஸ்ரோர்ஸ் சிவசாமியின் அன்புச் சகலனும், புவனேஸ்வரி, பசுபதிப்பிள்ளை கொழும்பு வெங்கா றேடர்ஸ் அரியநாயகம், யாழ் வர்த்தகர் தம்பிராஜா, கிளிநொச்சி வர்த்தகர் சிவபாதம் தர்மபூபதி, புவனேஸ்வரி, அன்னலெட்சுமி, கனகாம்பிகை, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை (22-07-87) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: இ. தர்மலிங்கம்
(1297)

## மேனன்- - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பேசினார்.

'இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை ஏற்பட்டுள்ளது'.

'இந்தியத் தூதர் டிக்ஸிற கொழுமபு அரசுத் தலைவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்திய பின்னர் வந்து தெரிவித்த தகவல்களின அடிப்படையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா ஆக்கபூர்வமான முறையில் பாடுபட முடியும என்று நம்புகின்றேன.

'டிசம்பர் 19 யோசனை அடிப்படையில் மட்டும் அலலாமல் அனைத்து வ்வகாரங்கள் பற்றியும் கொழும்பு அரசுடன் திரு. டிகஸிற் பேசியிருக்கின்றார்.

அவ் விவரங்களை முதலமைச்சரிடம் எடுத்துக கூறியுள்ளோம். அதற்காகவே சென்னை வநதோம்'– இப்படி திரு. மேனன் சொன்னார்.
(உ–எ)

## வித்தாரம்---

(3–ம பககத்தொடர்ச்சி)
னுல்தான் நாஙகள் சுதந்தரம பெறுவதறகு அருகதை உடையவர்கள ஆவோம்.

படிப்பும் அந்தஸ்தும் ஒருவனை உயாத்தாது, பழகக வழககமும, பண்புடதான ஒருவனை உயாத்தும எனபதை இனியாவது எங்கடை ஆககள் உணருவினமோ?...!

★ ★ ★

என்ன, அரசாங்கத் தினரை புதிய யோசனை பறறி தெறகிலை என மெனனனவோ எலலாம முழுஙகுகினம; சில சாபாா குளறுகினம.

ஆனால் அவர் கொந்தராததுககாரா வெளிநாட்டில இருந்து வநத பிறகு தானும இறுதி வடிவம தெரியும. அதுக்குப பிறகு தானும உருவததை வெளியில உலாவ விடுவினம.

அவர் ஜப்பானில வைசசுக் குடுத்த பேட்டியைப் பாததயா? ஒரு தீர்வு வாறதை விரும பாதமாதிரி சுத்திவளைச் சாா. ஏதோ அவரைத் தாஜா பணணிற பொறுபபை அதி உத்தமா்தானும் எடுத்திருககிறாா. உதில எஙகளுககு என்ன, காலம் பதில் சொல்லும்!

## குடா - - -

(3–ம் பக்கத்தொடர்ச்சி)
உடனடியாறும கோரிக்கை விடுககபபட்டிருக்கிறது.

தணணீரை சுடவைத்து பருகுமாறும் வேண்டுகோள விடுக்கப்பட்டிருககிறது.
(உ–10)

## முள்ளியவளை பகுதியில் 16 பேர் கைதாகினர்

### 6 பேர் பின்னர் சுட்டுக்கொலை

வவுனியா, ஜூலை 22
கடந்த வாரம முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, தண்ணியூற்று, முள்ளியவளை, முறிப்பு, வற்றுப்பளை, 6 ஆம் கட்டை, 3 ஆம் கட்டை போன்ற பகுதிகளைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 16 இளைஞர்களை கைது செய்தனர். அவர்களில் 6 பேர் பின்னர் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

கைதானவர்களை கள்ளப்பாடு கடற்கரைப் பகுதிக்குக் கொண்டு சென்று படகுகளில் ஏற்றும்போது மதகுரு ஒருவரின் வேண்டுகோளின் பேரில் 2 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் மரியநாயகம் என்ற 26 வயது இளைஞர் அப்பகுதியில் வைத்துச் சுட்டுக் கொலலப் பட்டார்.

முறிப்பு என்னுமிடத்தில தனிமையான ஓர் இடத்தில் இரண்டு பேர்– செல்லத்துரை வேலாயுதம் (வயது 32) என்பவரும் இன்னும் ஓர் இளைஞரும்— வெட்டிக்கொல்லப்பட்டு சடலங்களாக கண்டெடுக்கப்பட்டார்கள். இச் சடலங்களை ஊரார் பின்னர் எரித்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலையில், நீராவிப்பிட்டி வரிஜ்ரா நகரில் இடம் பெற்ற போராளிகளுடனான மோதலின் பின்னர் மூன்று பேர் சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆறுமுகம் என்பவரும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும், சிகையலங்காரத் தொழிலாளி ஒருவருமே இவ்வாறு கொலையுண்டவர்களாவர்.
(உ–164)

## இடைக்காலத் . , .

(1–ம பககத்தொடர்சசி)
மூர் அமைப்புகள்.

முககட்டப் பேச்சுக்களில் முன்னேற்றம் எப்படி ஏற்படும் எனபதைப் பொறுத்து இருநதுதான பாாகக வேணடும—

இவ்வாறு திரு. நேசன் தெரிவததாா.

திரு. நேசன் பேட்டியளித்த சமயம் ஈரோஸின முககிய பேசசாளரான திரு. பராவும கூட இருநதாா.
(அ–10)

## வல்லைப்பாலம் சேதமாக்கப்பட்டது

அச்சுவேலியில் இருந்து வடமராட்சிக்குச் செல்லும் முக்கிய பாதையில் உள்ள வல்லைப் பாலம் திங்கள் நள்ளிரவு இனம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

பாலத்தின் வடபகுதியே சேதமாக்சப்பட்டுள்ளது.

வல்லையூடாக வடமராட்சிப் பொதுமக்கள் யாழ்ப்பாணம் வர யாழ் அரச அதிபரின் வேண்டுகோளின் பேரில் இராணுவம் அண்மையில் அனுமதி அளித்தது தெரிந்ததே.

வல்லை நாற் சந்தியில் மினி முகாம் ஒன்று அமைக்கப்பட்டு பிரயாணிகள் சோதனையிடப் படுவதால் – படையினருக்கு மேலதிக அசௌகரியம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கே இப் பாலம் தகர்க்கப்பட்டிருக்கலாமெனக் கருதப் படுகின்றது (இ-119–160)

## ஆசிரியர் சம்பளம் இன்று

பலாலி, ஜூலை 22
யாழ்ப்பாணக் கல்வி மாவட்ட ஆசிரியர்களுக்கான சம்பளக் காசோலை இன்று (புதன்கிழமை) சகல வட்டாரக் கல்வி அதிகாரிகள் மூலம் சகல அதிபர்களிடமும் கையளிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் 19 ஆம் திகதியில் வழங்கப்படும். இக் காசோலைகள் இம்மாதம் தாமதமாகியுள்ளன.

சாதாரணமாக ஆசிரியர்கள் பெறும் சம்பளத்துடன் அவர்களுக்குரிய மூன்றுமாத விசேட சம்பள முற்பணமும் இம்முறை வழங்கப்படவுள்ளது.

இதற்குரிய மேலதிகப் பணத்தினை வங்கியிலிட்டதற்கான சான்றுக்கட்டளை(அட்வைஸ்) யாழ்ப்பாணத்திற்கு வரப்பிந்தியமையே இம்முறை சம்பளக் கொடுப்பனவு தாமதமடைந்ததற்குக் காரணமாகும். (உ–119)

## 'ஈழநாடு'--

(1–ம் பக்கத்தொடர்ச்சி)
டில் மீண்டும் வெளிவருவதற்கும் பெரிதும் உழைத்தவர்.

இவர் கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் நீண்டகாலம் பணிபுரிந்தார்.

தமிழ், சமய, சமூக வளர்ச்சிகளில் பெரும் அக்கறையும் ஆர்வமும் உள்ளவர் ஆவர்.

நீண்ட காலம் நோய் வாய்ப்பட்டிருந்த திரு. தங்கராசா கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று(புதன்) காலை 7-30 மணி ளவில் கொழும்பு கனத்தை பொது மயானத்தில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. (அ–எ)

## காங்கேசன் வேலைக்கு அனுமதி

குருநகர், ஜூலை 22
காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன துறைமு

சென்னை, ஜூலை 22
யாழ்ப்பாணத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா அரசு சிப்பாய்களை பார்வையிட அவர்களின் பெற்றோர், உறவினர்களை அனுமதிப்பது என்று தமிழீழ விடுதலைப் புலிகள இயக்கம் அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை இந்திய வானொலி நேறறு வெளியிட்டது. (ஆ–எ)

## ஊழியரை அழைப்பு

கம் மற்றும் சப்பல் ஊழியர்களை நாளை 23 ஆம் திகதி காலை எட்டு மணிக்கு மாவிட்டபுரம், காங்கேசன்துறை வழியாக வேலைக்குத் திரும்பும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அப்படி வருபவர்கள் தேசிய அடையாள காட்டையும், தொழிற்சாலை அடையாள காட்டையும் தம்முடன் கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல் நேற்று மாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவை மூலமாக விடுக்கப்பட்டது.
(உ–ரி)

## பொதுக்கூட்டம்

ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்த பத்தாண்டு கால நிறைவை ஒட்டி இன்று புதன் கிழமை மாலை கொழும்பு புறக்கோட்டையில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன, மற்றும் அமைச்சர்களும் பேசுவர். (உ–எ)

## இந்திய பரசூட் படை.....

(3–ம பககத்தொடர்ச்சி)
எடுத்து இந்தியாவுக்கு ஓடினார்கள்.

இப்போது அப்படி அல்ல. சணடை நடக்கும் இடத்தில் இருந்து வெளியேறி அரசுக கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசஙகளுககு அததமிழ் மககள் வருகின்றனர்.

இப்படி அவ்வட்டாரஙகள் சுட்டிக காட்டுகின்றன.

டிசமபர் 19 யோசனையை எதிர்ப்பதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயககா கூறியிருககிறார்,

இப்போது வழங்கப் படப்போகும் புதிய சலுகைகள் திருமதி பண்டாரநாயக்காவுக்குத் ... கொடுக்கப்போகின்றன– இப்படி அந்த ... ரங்கள் தெரிவித்தன.

'வேறு என்ன வழிகள் உண்டு?'— இப்படி சிரேஷ்ட அமைசசா ஒருவர் கேட்கிறார்.

'மீணடும கியூவரிசைக் காலத்துககுச் செலலச் சொலகிறீர்களா?

'அது காலையிலேயே பாணுககும் பாலுககும கியூவில மீண்டும போய் நிறகவேணடுமா?

'நடந்ததைக் கெட்ட கனவாக மறந்துவிட்டு விழித்தெழுந்து தெனஆசியாவின தென கொரியாவாக இலங்கையை மாற்றுவோம'—

இப்படி அசசிரேஷ்ட அமைச்சா சொலலுகிறார்.

### வழமைக்கு மாறான அவசரம்

இந்த யோசனையினுள் உளளடங்கு ஒனறை எப்படியாவது கண்டு விடவேண்டும் என்பது குறித்து வழமைககு மாறான அவசரம காணபபடுகனறது.

ஆமமாதம 25 இல் பிரதமா பிரேமதாசா டோக்கியோவில இருந்து திரும்புகின்றார்.

புதிய யோசனைகள் பறறி பிரதமா என்ன கருததுக கொண்டுள்ளாா?

இக கேள்விக்குத் தான இன்னும் பதில கிடைககவிலலை.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு வரவுள்ளது.

ஆகவே பிரச்சினைக்கு தீர்வு கண்டு சமாதானத்தைக கொண்டுவரும எநத உடன்பாட்டையும புறககணிகக முடியாத நிலையும ஏறபடலாம.

(முற்றும்)

### சைக்கிள் விற்பனையும் பழுதுபார்த்தலும்

★ றேசர் சயிக்கிள் இந்தியன் 1500/-
★ யுப்பிற்றர் சயிக்கிள் ஜப்பான் 1990/-
★ பைசான் சயிக்கிள் சீன 1900/-

இதன் உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

P. அந்தோனிப்பிள்ளை
50, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஈழநாடடுக்கு முன்பாக)

சென்ற 55 வருட காலமாக சைக்கிள் பழுது பார்ப்பதில் அனுபவம்வாய்ந்தவர். (1298)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர் து அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 22-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Wednesday July 22. 1987

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org